பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

23 09 2022 6 45

வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர்கள் பங்கேற்கும் தேசிய மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காணொலி மூலம் தொடங்கி வைக்கிறார்.
- கோவிட் தாக்கத்திலிருந்து மீண்ட பின்னர் நாடு அனைத்து துறைகளிலும் வளர்ச்சி பெற்று வருவதாக பிஜேபி தலைவர் திரு. ஜேபி. நட்டா கூறியுள்ளார்.
- துறைமுகங்கள் வரைவு மசோதாவில் மாநில அரசு உரிமைகளை பாதிக்கக்கூடிய அம்சங்களை நீக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.
- தமிழகத்தில் பெட்ரோல், டீசல் விலையை குறைப்பதற்கான எந்த நடவடிக்கையையும் திமுக அரசு எடுக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.
- இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான இரண்டாவது டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நாக்பூரில் நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ----

<<<<>>>>

மாநில சுற்றுச்சூழல் அமைச்சர்கள் பங்கேற்கும் தேசிய மாநாட்டினை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக தொடங்கிவைத்து உரையாற்றுகிறார்.

குஜராத் மாநிலம் **Ekta** நகரில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றுவதற்காக மாநில அரசுகளுடன், ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இதில் ஆலோசிக்கப்படவுள்ளது.

பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தடுப்பதற்கான வாழ்வியல் முறை குறித்தும் இதில் விவாதிக்கப்படவுள்ளது.

இந்த, இரண்டு நாள் மாநாடு ஆறு அமர்வுகளை கொண்டதாக இருக்கும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

புதிய இந்தியா குறித்த பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சொற்பொழிவுகள் அடங்கிய புத்தகத் தொகுப்பு இன்று புதுதில்லியில் வெளியிடப்படுகிறது.

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் புத்தக வெளியீட்டுப் பிரிவு **Sabka Sath, Sabka Vikas, Sabka Viswas, Prime Minister Narendra Modi Speaks** என்ற தலைப்பில் இப்புத்தகத்தை வெளியிடுகிறது.

பிரதமரின் உரைகள் ஹிந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் உள்ளன.

புதுதில்லி ஆகாஷவாணி பவனில் நடைபெறவுள்ள இதற்கான நிகழ்ச்சியில், கேரள ஆளுநர் திரு. ஆரிஃப் முஹமது கான், முன்னாள் குடியரசு துணைத் தலைவர் திரு. வெங்கைய நாயுடு, மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர், மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் செயலர் திரு. அபூர்வ சந்திரா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

2019ஆம் ஆண்டு மே மாதம் முதல், 2020ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான பிரதமரின் 86 உரைகள் இந்த புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.

அமேஸான் மற்றும் கூகுள்ப்ளே மூலமாகவும், பாரத் கோஷ் இணையதளம் மூலமாகவும் இந்த புத்தகத்தை பெற்றுக் கொள்ளலாம்.

**<<<<>>>>**

பாரம்பரிய மருத்துவத்தில் உலக அளவில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய ஆயுஷ்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

நேற்று பெங்களூருவில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பாரம்பரிய மருத்துவமுறையை ஊக்கப்படுத்துவதற்காக தமது துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை பட்டியலிட்டார்.

தேசிய ஆயுஷ் இயக்கத்தின்கீழ், பாரம்பரிய மருத்துவமுறை சார்ந்த ஆராய்ச்சிகளுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

பாரம்பரிய மருத்துவமுறை சார்ந்த படிப்புகளில் இளையோர் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

**<<<<>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி மேற்கொண்டுவரும் உறுதியான நடவடிக்கைகள் காரணமாக விரைவான பொருளாதார வளர்ச்சி கண்டுவரும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

மதுரையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சரக்கு மற்றும் சேவை வரி பெரும் மாற்றத்தை கொண்டுவந்திருப்பதாக தெரிவித்தார்.

இந்த வரி வருவாய் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் அவர் கூறினார்.

கோவிட் தாக்கத்திலிருந்து மீண்ட பின்னர் நாடு அனைத்து துறைகளிலும் வளர்ச்சி பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

வறுமைக்கோட்டிற்குகீழ் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை 10 சதவீதமாக குறைந்துள்ளது என்றும் திரு. நட்டா கூறினார்.

மதுரை விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கு 550 கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு 633 ஏக்கர் நிலம் மத்திய அரசு கேட்டிருந்த நிலையில், தமிழக அரசு 543 ஏக்கர் நிலத்தை மட்டுமே கொடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மதுரையில் எயிம்ஸ் மருத்துவமனை அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் 95 சதவீதம் நிறைவடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மதுரை மாவட்ட வளர்ச்சிக்காக இதுபோன்ற திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

சர்வதேச அரங்கிலும் இந்தியாவின் நன்மதிப்பு உயர்ந்துள்ளதாக திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

<<<<>>>>

துறைமுகங்கள் வரைவு மசோதாவில் மாநில அரசு உரிமைகளை பாதிக்கக்கூடிய அம்சங்களை நீக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த வரைவு மசோதா சிறு துறைமுகங்களின் எதிர்கால வளர்ச்சியை தடுப்பதாக உள்ளது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதனை கருத்தில்கொண்டு, சர்ச்சைக்குரிய பிரிவுகளை மத்திய அரசு நீக்கிட வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் பெட்ரோல், டீசல் விலையை குறைப்பதற்கான எந்த நடவடிக்கையையும் திமுக அரசு எடுக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சேலம் மாவட்டம் ஆட்டையாம்பட்டியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், மத்திய அரசு பெட்ரோல் - டீசலுக்கான விலையைக் குறைத்த பிறகு, 26 மாநிலங்கள் விலைக் குறைப்பு நடவடிக்கையை எடுத்துள்ளதையும் சுட்டிக்காட்டினார்.

கடந்த அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட மடிக்கணினி திட்டம் தற்போது செயல்படுத்தப்படவில்லை என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.

<<<<>>>>

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் 300 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் பெருந்திட்டப் பணிகள் அனைத்தும் விரைந்து முடிக்கப்படும் என்று இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர் பாபு தெரிவித்துள்ளார்.

திருச்செந்தூரில் இப்பணிகளை ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

<<<<>>>>

டோக்கியோவில் வரும் 27ஆம் தேதி நடைபெற உள்ள ஜப்பான் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே-யின் இறுதிச் சடங்கில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்துகொள்கிறார்.

<<<<>>>>

யுக்ரைன் போரை விரைவில் முடிவுக்குக் கொண்டுவந்து பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காண உலக நாடுகள் நிர்பந்திக்க வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

பசுமை எரிசக்திக்கான சர்வதேச நடவடிக்கை அமைப்பின் மாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடியின் நிலைப்பாடு விரிவாக எடுத்துரைக்கப்படும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று பீகார் செல்கிறார்.

<<<<>>>>

பழனி முருகன் கோவிலில் கடந்த 2 நாட்களாக காணிக்கை எண்ணும் பணி நடைபெற்று வருகிறது. 2 கோடியே 71 லட்ச ரூபாய் ரொக்கம், ஆயிரத்து 85 கிராம் தங்கம், 15 கிலோ வெள்ளி மற்றும் 2 ஆயிரத்து வெளிநாட்டு ரூபாய் நோட்டுகளும் கோவிலுக்கு வருவாயாக கிடைத்துள்ளன.

<<<<>>>>

நெல்லை மாவட்டத்தில் வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் விவரங்களை இணைப்பதற்கான சிறப்பு முகாம் நாளையும், நாளை மறுநாளும் நடைபெறும் என்று மாவட்ட ஆட்சியர் திரு. விஷ்ணு அறிவித்துள்ளார்.

<<<<>>>>

தருமபுரி மாவட்ட ஆட்சியர் தலைமையில் வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தம், வாக்குச்சாவடி இடமாற்றம் உள்ளிட்டவை தொடர்பாக அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் பங்கேற்ற கூட்டம் நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் தீபாவளி பண்டிகை காலத்தில் கோ-ஆப்டெக்ஸ் மூலம் ஒரு கோடியே 31 லட்ச ரூபாய் மதிப்பிற்கு பட்டு மற்றும் பருத்தி ஆடைகள் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டத்தில் மழை குறித்த பேரிடர் மேலாண்மை மற்றும் விழிப்புணர்வு தகவல்களை **TNSMART** என்ற செயலியை பதிவிறக்கம் செய்து தெரிந்துகொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் திருமதி ஸ்ரேயா சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

ஈரோட்டில் அஞ்சல்துறை குறைகேட்புக் கூட்டம் இம்மாதம் 30ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் கிருஷ்ணகிரியில் மண்டல அளவிலான மின்விபத்து பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் குறித்த ஒருநாள் பயிற்சி நேற்று வழங்கப்பட்டது.

<<<<>>>>

கரூர் மாவட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை குறித்த ஆய்வுக் கூட்டமும், மாவட்ட அளவிலான குழந்தைகள் பாதுகாப்புக் குழுக் கூட்டமும் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பிரபு சங்கர் தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

திருவாரூர் மாவட்டத்தில் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாநில போக்குவரத்துத் துறை ஆணையர் திரு. நிர்மல்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டம் ஐயம்பாளையம் மருதாநதி நீர்த்தேக்கத்தில் இருந்து இன்றுமுதல் 30 நாட்களுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

நாக்பூரில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

மூன்று போட்டிகளை கொண்ட இந்த தொடரின் முதல் ஆட்டத்தில் வெற்றிபெற்று ஆஸ்திரேலியா முன்னிலை பெற்றுள்ளது.

<<<<>>>>

**Braga** ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் – இந்தோனேஷியாவின் **Christopher Rungkat** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

போர்ச்சுக்கல்லில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-3, 6-4 என்ற செட் கணக்கில், போர்ச்சுக்கல்லின் **Joao Domingues – Goncalo Falcao** இணையை வென்றது.

**<<<<>>>>**